DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

Case No.	:	S.C. 65/2016
Deposition of Witness for	:	P.W.9
Name	:	**திரு. காளிரத்தினம்**
Father's Name	:	
Village	:	
Taluk	:	
Calling	:	
Age	:	

(வழக்கின் எதிரிகள் 7, 8, மற்றும் 11 ஆஜர். 1, 2, 3, 4, 5, 6, 9, 10 மற்றும் 12 -ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 3, 4, 5, 6, 9, 10 மற்றும் 12 -ம் எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.11.2025

<u>முதல் விசாரணை:</u>

1. நான் மதுரை அரசு மருத்துவமனையில் பேராசிரியராக பணிபுரிந்து கடந்த 31.03.2019 ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்சமயம் மதுரையில் வசித்து வருகிறேன். நான் மதுரையில் உள்ள அரசு ராஜாஜி மருத்துவமனையில் பேராசிரியராக பணியிலிருந்த சமயம் வார்டு மருத்துவ அதிகாரியாக பணியிலிருந்த 24.01.2015 ம் தேதி திருப்புவனம் அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சையாக மருத்துவ அதிகாரியின் வேண்டுதலின் பேரில் காயங்களுடன் சிகிச்சைக்கு வந்த சண்முகம், வயது 63 என்பவரை IP.No.1208 பிரகாரம் 24.01.2015 முதல் 26.01.2015 வரை

உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என மருத்துவ அறிக்கையை அனுப்பினேன்.

2. மேலும் வயது 13 உடைய சிவரஞ்சனி என்பவர் காயங்களுடன் வந்தவரை IP.No.1214 பிரகாரம் 24.01.2015 முதல் 26.01.2015 வரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என மருத்துவ அறிக்கையை அனுப்பினேன். மேலும் செல்வகணபதி வயது 17 என்பவரை IP.No.1260 பிரகாரம் 24.01.2015 முதல் 26.01.2015 வரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என மருத்துவ அறிக்கையை அனுப்பினேன்.

3. சக்திவேல் மகள் ஜெயமணி வயது 33 என்பவர் காயங்களுடன் வந்தவரை IP.No.1213 பிரகாரம் 24.01.2015 முதல் 26.01.2015 வரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என மருத்துவ அறிக்கையை அனுப்பினேன். மேற்படி நான்கு நபர்களின் மருத்துவ அறிக்கையை திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் நேரடியாக மருத்துவ விசாரணை செய்யவில்லை என்றால் திருப்புவனம் அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிக்சைக்காக அனுப்பி வைத்தன் பேரில் நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அந்த நபர்கள் யார் யார் எங்கு தாக்கியது என என்னிடம் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி காயம் பட்ட நான்கு நபர்களுக்கும் மேற்படி காயங்களானது கூட்ட நெரிசலில் கீழே விழுவதால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அந்த காயத்தின் தன்மை என்னிடம் சிகிக்சைக்கு வருவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டா என்றால் அது பற்றி கருத்து சொல்ல இயலாது.

மறு விசாரணை: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.03 12:48:40 +0530

உதவி அமர்வு நீதிபதி,

தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

சிவகங்கை.